**தலைப்பு 211 – அரசாங்க அச்சகத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 03 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் கணனி அச்சீட்டு அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,099.97 மில்லியனாக இருந்ததுடன் நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் அது ரூபா | திறைசேரியினி கணக்கீட்டு அச்சீட்டு அறிக்கைகள் திணைக்களத்தின் கணக்கு புத்தகங்கள் ஆகியவற்றுக்கிடையே சில இணக்கமின்மைகள் காணப்படின் அவற்றை | 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட Polymer Plate Making இயந்திரத்தின் கைதவிர்ப்பு கட்டணம் மற்றும் உள்நாட்டு வழங்கல்களின் கட்டணம் 2020 ஆம் ஆண்டின் போது CIGAS |

| | | | |
|---|---|---|---|
| 1,099.04 மில்லியன் ஆனமையினால் ரூபா 0.9 மில்லியனான இணக்கமின்மை காணப்பட்டது. | தாமதமின்றி திருத்த வேண்டும். | நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதால் உங்களால் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 928,131 ஆன நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்கிடையேயான இணக்கமின்மைகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. | |

**1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 நவம்பர் 07 ஆந் திகதிய 22/99(xxxiii) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.3.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் 05 இடங்களின் தெரிவு பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட நான்கு மாதங்களினுள் சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறும் வகையில் திணைக்களத்தின் வாகனங்கள் 10,353 கிலோமீற்றர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | அவசர கடமைகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் நள்ளிரவு வரையிலும் கடமைகளில் ஈடுபடு நேர்கின்றமை இவ்வாறு சுற்றறிக்கைகளை மீறுவதற்கு காரணங்களாக அமைந்த மற்றுமொரு விடயமாகும். | ஏற்பாடுகளுக்கு இணங்க கடமைகளுக்கு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட 2009 ஆம் ஆண்டினதும் அதற்கு முன்னைய வருடங்களினதும் நிலுவை வருமான மீதியான ரூபா 166,058,339 தொகையில் எந்த பணமும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமான மீதிகளை அறவிடவதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை அறவிடுவதற்கு இயலுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நிலுவைப் பணத்தை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்குமாறு 2020 சனவரி 28 ஆந் திகதி அரச நிதித் திணைக்களத்திடம் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 122,782,608 தொகையான நிலுவை மீதியில் 12 சதவீதத்திற்கு சமனான ரூபா 15,183,634 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | குறித்த கடன்பட்டோரிடமிருந்து பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் நிலுவைப் பணத்தில் ரூபா 15,303,039 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த நிறுவனங்களுக்க அறிவித்து நிலுவைப் பணத்தினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியாக 05 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,269,269 தொகையான கடன் மீதிகள் காணப்பட்ட போதிலும், அந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற நேரடி சான்றுகளின் பிரகாரம் எவ்வித கடன் தொகையினையும் செலுத்துவதற்கு இல்லையென்பது அவதானிக்கப்பட்டது. | குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அச்சீட்டுப் பணிகளை நிறைவேற்றிக் கொடுத்த நிறுவனத்திற்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை நிலவும் நிலுவைப் பணங்கள் தொடர்பில் அறிவித்த போது பெரும்பாலான நிறுவனங்களிடம் பழைய கடன் மீதிகள் தொடர்பில் தகவல்கள் இல்லாமையினால் அதனை கருத்திற் கொள்ளாது விடப்பட்டுள்ளது. |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனும் நிதியாண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களும் அந்த ஆண்டினுள் செலுத்தி விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டினுள் 12 செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 9,094,996 ஆன தொகை தேறிய நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் மீண்டெழும் தன்மையுடைய வழங்கல்களுக்காக அதற்கடுத்த வருடத்தினுள் தீர்ப்பனவு செய்வதற்கு நேரும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட முடியும். |

## 2.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஓய்வுபெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 356,300 கூட்டுத்தொகையான 2 முதல் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக உள்ள தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் மீதியை கடந்த வருடங்களிலும் காணப்பட்டதுடன் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்தக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் கடன்பட்டவர் இல்லாத சந்தர்ப்பத்தில் அந்த கடன் மீதியினை பிணையாளரிடம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 70 உத்தியோகத்தர்களின் ரூபா 3,990,395 கூட்டுத்தொகையான கடன் மீதியை பிணையாளியிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த கடன் மீதியை பிணையாளரிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-----------------------------------

**3.1 முகாமைத்துவ நலிவுகள்**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தின் அச்சீட்டுப் பணிகளை துரிதமாக பூர்திதி செய்வதற்காக சில பணிகளின் பகுதிகளுக்காக மேலதிக நேரபடிகளை செலுத்துவதற்கு துண்டுக் கூலி அடிப்படையில் கொடுப்பனவை மேற்கொள்ளும் நடைமுறைக்காக 1981 திசெம்பர் 16 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2009 செப்டம்பர் 11 ஆந் திகதி கூட்டப்பட்ட அரச கணக்குகள் குழுவினால் இந்த ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவினை தயாரிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், | 2009 ஆம் ஆண்டின் போது அரச கணக்குகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் பொருத்தமான ஊக்குவிப்பு கொடுப்பனவு முறைமை ஒன்றினை துரிதமாக அறிமுகப்படுத்த வேண்டியமை. | அரச அச்சக திணைக்களத்தில் தற்போது காணப்படும் கொடுப்பனவு முறைமையை எளிமையாக்குவதற்கு அரச கணக்குகள் குழுவினால் மற்றும் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஊழியர் ஆணைக்குழு மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினாலும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | 2020 ஆகஸ்ட் மாதமளவிலும் அந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக அமைச்சரவை தீர்மானத்தினை அடிப்படையாகக் கொண்டு அச்சீடு அல்லாத பணிகளுக்காக துண்டுக் கூலி அடிப்படையிலான கொடுப்பனவினை கொண்ட ரூபா 2,561,775 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. அச்சீட்டுக்குரிய நாளாந்த கடமைகளுக்கு மேலதிகமாக கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | மேற்படி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக நேர படிகளை செலுத்துவதற்கு துண்டுக் கூலி அடிப்படையிலான கொடுப்பனவு நடைமுறையொன்று (Piece Rate Base Payment) அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த நிலைமையினை கருத்திற் கொள்ளாது நிறுவனத்தின் திறன்சார் மற்றும் திறன்சாரா உத்தியோகத்தர் களுக்காக (பதவிநிலை மற்றும் நிறைவேற்றுத் தர தரங்கள் தவிர்ந்த) துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேரப் படிகள் ஆகிய இரண்டும் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது மீளாய்வாண்டின் போது 06 மாதங்களில் திணைக்களத்தின் பணி அடிப்படை உத்தியோகத்தர்களுக்கு துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளாக ரூபா 26,879,603 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் ஏனைய கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்ட ரூபா 824,337,563 தொகைக்காக நிறுவனத்தின் பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது மேலதிக நேர அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடாது மற்றும் அவ்வாறே உற்பத்தி அடிப்படைகள் (Norms) நாளதுவரையாக்கப் பட்டு ஊழியர்களுக்கு உற்பத்தி இலக்கினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவிநிலை தரங்கள் தவிர்ந்த ஏனைய தரங்களுக்காக மேலதிக நேர கணிப்பீட்டிற்கு கொடுப்பனவுகளை செலுத்தும் போது அவர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய வேலையின் பகுதி தனித்தனியாக இனங்காணப்படுகின்றது. நாளாந்தம் உற்பத்தியாக நிறைவேற்றப்பட வேண்டிய பணியின் அளவு ஈடுபடுத்தப்பட்ட மேலதிக நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பணியின் அளவு ஆகிய இரண்டின் கூட்டுத்தொகை அவர்களால் நிறைவேற்றப்பட்ட ஒட்டுமொத்த உற்பத்தியில் கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் அளவிற்கு மாத்திரம் மேலதிக நேரப் படிகள் செலுத்தப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்களத்தினால் தமது அச்சீட்டுப் பணிகளின் போது எஞ்சும் கடதாசிகள் (அஸ்கொன் கடதாசி) விற்பனை செய்யும் நடைமுறைக்குரிய விலைக் கேள்வி கையளிப்பு கடிதத்தின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு கடதாசி இருப்பிலும் திணைக்களத்தின் வளாகத்திலிருந்து அகற்றுவதற்கு முன்னர் ரூபா 200,000 தொகை முற்பணமாக வைப்பு செய்யப்பட வேண்டியதுடன் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிறையிடப்பட்ட பின்னர் அத்திகதியில் உள்ளபடியான நிறைக்கு ஏற்ப எஞ்சிய பெறுமதி காசாக செலுத்தி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். நிலுவைப் பட்டியல்களை தீர்ப்பனவு செய்யும் வரை இருப்பினை அகற்றிக் கொள்ளக்கொள்ள முடியாத போதிலும், 13 சந்தர்ப்பங்களில் தனியார் கம்பனியொன்றினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2.1 மில்லியன் கிரயமான 47,912 கிலோ கிராம் எடைக்காக 30 நாட்கள் முதல் 160 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக தனிநபர் ஒருவரால் 08 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,398,800 பெறுமதியான 38,377 கிலோகிராம் நிறையுள்ள கடதாசிகளுக்காக 34 நாட்கள் முதல் 62 நாட்கள் வரையிலான காலதாமதத்தின் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், அச்சிடல் பணிகளின் போது சேகரிக்கப்படும் அஸ்கொன்கடதாசியினை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று | கொள்வனவாளருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அனைத்து பணமும் தாமதமின்றி அறவிடப்பட வேண்டியமை மற்றும் அஸ்கொன் கடதாசிகளின் இருப்பினை பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டியமை. | விலைக் கேள்வி கையளிக்கப்பட்டிருந்த கொள்வனவாளர்களில் இருவரால் தொடர்ந்தும் எவ்வித நிலுவைப் பணம் செலுத்த உள்ளதுடன் அந்தப் பணத்தை உரிய முறையில் செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு செலுத்தாதுவிடின் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அஸ்கொன் கடதாசிகளை சேகரித்து வைக்கும் கட்டிடத்தினை விரிவாக்கி இந்த நிலைமைய முகாமை செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மற்றும் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்படாமையினால் அந்தக் கடதாசிகள் மழைநீருக்கு நனைவதற்கு வாய்ப்புள்ள வகையில் காணப்பட்டதுடன் அதன் மூலம் அந்த கடதாசிகளை ஒப்பீட்டு ரீதியில் கூடுதலான விலைக்கு விற்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | | |
| (ஈ) | அரச நிர்வாக மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சின் 2019 மார்ச் 28 ஆந் திகதிய EST/ALLOW/03/0720 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பயிலுனர் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி காலத்தினுள் நாளாந்த கொடுப்பனவுகளாக ரூபா 700 செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த கொடுப்பனவுக்கு மேலதிகமாக ஏனைய படிகள் மற்றும் மேலதிக நேரப் படிகளாக 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 21,813,006 கூட்டுத்தொகை குறித்த பயிலுனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் தற்போது இலங்கையில் தாபிக்க முடியாத அச்சீட்டு துறைக்குரிய தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) இன் ஐந்தாம் மட்டத்திற்கான பாடநெறியினை நடாத்துவதற்காக இலங்கை அச்சீட்டு நிறுவனத்திற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 7,321,600 செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிகள் மாத்திரம் பயிலுனர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் அச்சீட்டு சேவைகள் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் குறித்த பயிலுனர்களினால் தமது தொழில்சார் தகைமை மட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டியமை. | தேசிய தொழில்சார் தகைமைகள் 5 ஆம் மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டியமை மற்றும் இந்த பயிலுனர்களுக்கு சேவை தேவைப்பாட்டின் காரணமாக அவ்வாறு பணம் செலுத்தப்பட்டுள்ளது. |
| (உ) | 2019 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற சனாதிபதி தேர்தலில் தெரிவு செய்வதற்கான தேர்தலின் போது வாக்குச்சீட்டுகள் மற்றும் ஏனைய தேர்தல் ஆவணங்களை அச்சிடுவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அரச அச்சக திணைக்களத்திற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி உள்ளடங்கலாக ரூபா 349,885,286 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அது | | |

தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | வாக்குச்சீட்டுகளை அச்சிடும் போது செலவிடப்படும் கடதாசியின் கிரயம் எவ்வித ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணமுமின்றி ரூபா 13,543,814 இனால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் வாக்குச்சீட்டுப் புத்தகத்தினை அச்சிடும் போது செலவிடப்படும் மூலப்பொருட்கள் ஊழியம் மற்றும் மேந்தலைக் கிரயத்திற்கு மேலதிகமாக ஒரு வாக்குச்சீட்டுப் புத்தகத்துக்காக எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ரூபா 80 மேலதிகமாக பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பட்டியலின் பெறுமதியானது ரூபா 28,568,000 இனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 357,100 வாக்குச்சீட்டுப் புத்தகங்களை அச்சிடும் போது ரூபா 42,111,814 தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே இரட்டை வாக்குரிமை சீட்டுக்கள் புத்தகங்களினை அச்சிடும் போது செலவிடப்படும் மூலப்பொருட்கள் மற்றும் ஊழியம் மற்றும் பொது மேந்தலைக் கிரயத்திற்கு மேலதிகமாக எவ்வித ஏற்றுக்கொள்ளக் கூடிய அடிப்படையும் இல்லாது ரூபா 42 மேலதிகமாக சேர்க்கப்பட்டமையால் ரூபா 750,456 தொகை தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து | தேர்தல்கள் ஆணைக்குழு தமது செலவினங்களினை நிதியீட்டம் செய்வது திறைசேரியின் ஊடாக என்பதனால் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களின்றி கிரயத்தை அதிகரிக்க கூடாது. | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |

கூடுதலாக அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த வாக்குச்சீட்டுக்களினை அச்சிடும் போது அச்சீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 42,862,270 கூட்டுத்தொகை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இருந்து கூடுதலாக அறவிடப்பட்டிருந்தது. அதன்மூலம் திணைக்களத்தின் 24 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வணிக ரீதியான அச்சீட்டு கொடுப்பனவுகளாக ரூபா 965,684 கூட்டுத்தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திணைக்களத்தின் ஊழியர்களுக்கு துண்டுக் கூலியின் அடிப்படையிலான கொடுப்பனவுகள், ஏனைய படிகள் மற்றும் விசேட படிகள் ஆகியவற்றை செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 745,580,000 தொகை திறைசேரி நிதியேற்பாடுகளில் இருந்து வழங்கப்பட்டுள்ள போது இந்த தேர்தல் அச்சீட்டு பணிகளுக்காக துண்டுக் கூடி அடிப்படையிலான கொடுப்பனவுகள் மற்றும் விசேட கொடுப்பனவுகளாக ரூபா 128,200,493 தொகை திணைக்களத்தின் பதவிநிலை தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், தேர்தல்கள் அச்சீட்டு பணிகளுக்காக வணிக ரீதியான அச்சீட்டு கொடுப்பனவுகளாக ரூபா 7,290,826 தொகை

துண்டுக்கூலி அடிப்படையிலான கொடுப்பனவுகள் மற்றும் விசேட கொடுப்பனவுகளாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இருந்து அறவிடுதலும் அந்த பணிக்காக துண்டுக்கூலி அடிப்படையிலான கொடுப்பனவுகளாக திணைக்களத்தின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் மீண்டும் கொடுப்பனவு மேற்கொள்ளக் கூடாது.

தேர்தல்களுக்குரிய 17.9 மில்லியன் வாக்குச்சீட்டுக்கள் சுமார் 28 தினங்கள் எனும் மிகவும் குறுகிய காலத்தினுள் அச்சிட்டு நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. அதற்காக ரூபா 135,102,656 தொகை தேர்தல்கள் கொடுப்பனவாக செலுத்தப்பட்டமையினால் ஒரு வாக்குச்சீட்டு புத்தகத்தின் கிரயம் ரூபா 677 ஆக காணப்பட்டது. அவ்வாறே மேற்படி செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை சீராக்கம் செய்யும் போது இரட்டை வாக்குரிமை வாக்குச்சீட்டு புத்தகத்தின் பட்டியல் விலையும் ரூபா 296 ஆக அதிகரித்திருந்தது.

பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த கொடுப்பனவிற்காக ரூபா 135,491,319 தொகை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இருந்து அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறு பணம் அறவிடப்பட்டமையால் ஒரு வாக்குச்சீட்டின் புத்தகத்திற்காக பட்டியலிடப்பட்ட விலை ரூபா 400 இலிருந்து ரூபா 677 வரை அதிகரித்திருந்தது. இவ்வாறு துண்டுக்கூலி அடிப்படையில் கொடுப்பனவுகள் மற்றும் விசேட கொடுப்பனவுகளாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இருந்து ரூபா 128,200,493 அறவிடப்பட்டுள்ள போது ரூபா 745,580,000 தொகையான திறைசேரியின் நிதியேற்பாட்டினை பயன்படுத்தி அச்சீட்டு பணிகளில் ஈடுபட்ட அச்சீட்டு ஊழியர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக துண்டுக் கூலி அடிப்படையிலான கொடுப்பனவுகள், விசேட கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேரப் படிகளும் செலுத்தப்பட்டு அந்த அச்சீட்டுப் பணிகளில் ஈடுபட்ட காலப்பகுதியினுள் இலவசமாக உணவு மற்றும் குடிபாணம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு துண்டுக் கூலி அடிப்படையில் கொடுப்பனவுகளாக ரூபா 1,172,469 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் கல்வியாண்டிற்காக பௌத்த அறநெறி பாடசாலை புத்தகங்களை அச்சிட்டு 2019 யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பௌத்த அலுவலகங்கள் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு அந்த திணைக்களதுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், பல்வேறு தரங்களுக்காக பௌத்த அறநெறி பாடசாலை புத்தகங்களை அச்சிட்டு கையளிக்கும் போது 01 முதல் 37 நாட்கள் வரையான தாமதக் காலம் அவதானிக்கப்பட்டது. | உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான பாடசாலைகளுக்குரிய 22 வகையான பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 06 வகையான புத்தகங்கள் மாத்திரம் விலைக்கேள்வியில் பெற்றுக் கொள்ள முடியுமானதாக இருந்தது. ஏனைய அச்சீட்டு நிறுவனங்கள் சமர்ப்பித்த கூறுவிலைகளை விட திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் சுமார் 4 சதவீதம் முதல் 31 சதவீதம் வரையான வீச்சில் | அச்சீட்டுப் பணிகளின் போது திணைக்களத்தின் கூறுவிலைகள் அதிகரிப்பதற்கு தாக்கம் செலுத்தியுள்ள விடயங்கள் தொடர்பில் மீளகவனம் செலுத்தி கூறுவிலைகளை தீர்மானிக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

அதிகமானதாக காணப்பட்டமை அதற்கு காரணமாக இருந்தது.

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 33 ஆம் அத்தியாயத்தின் 2.1.4.1 ஆம் பந்திக்கு முரணாக திணைக்களத்தினால் ரூபா 4,468,788 கூட்டுத்தொகையான புதுப்பித்தல் பணிகளுக்காக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு வானவில் பக்கங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு அல்லாத நிறுவனங்களிடமிருந்து 14 சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. | பெறுகை பணிகளின் போது அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அச்சீட்டு திணைக்களத்தின் மிகவும் அவசர மற்றும் அத்தியாவசிய பழுதுபார்த்தல் பணிகளுக்காக சில மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மேற்படி விதிகளுக்கு முரணாக கொள்வனவுகள் இடம்பெற்றுள்ளன. |
| (ஆ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.22 ஆம் பந்தியின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் போது விலைக்கேள்வி கோருவதற்காக ஆகக் குறைந்த காலஎல்லை 07 நாட்கள் ஆன போதிலும், பெறுகைகள் குழுவினால் ரூபா 6,474,558 கூட்டுப்பெறுமதியுடைய 17 சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | பெறுகை பணிகளின் போது அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் இந்த நிலைமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) திணைக்களத்தின் வாசிப்பு பிரிவு மற்றும் கணனி பிரிவில் சுமார் 6500 கன அடிகள் பரப்புடைய நிலத்திற்கு தள ஓடுகளை பதிப்பதற்காக (Floor Tiles) 1700 எண்ணிக்கையானவை ரூபா 1,219,563 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த பணி தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது தரைக்கு பதிக்கப்பட்டிருந்த சுமார் 1000 பளிங்குக் கற்கள் மாத்திரம் பதிக்கப்பட்டிருந்ததுடன் சுமார் ரூபா 502,173 பெறுமதியான எஞ்சிய 700 எண்ணிக்கையான பளிங்குக் கற்கள் மீளவும் களஞ்சியத்திற்கு கையளிக்கப் படாதிருந்ததுடன் அது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்குரிய உத்தியோகத்தர்கள் தவறியிருந்தனர். பின்னர் அந்த பணிகளை நிறைவு செய்வதற்கு ரூபா 578,263 பெறுமதியான 700 பளிங்குக் கற்கள் மற்றொரு இடத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தரைக்கு தள ஓடுகளை பதித்தல் தொடர்பான பரிசோதனை ஒன்றை நடாத்தி குறித்த பற்றாக்குறையை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுத்தல். | கணனிப் பிரிவில் அந்த தள ஒடுகள் பதித்த பின்னர் எஞ்சியவற்றை வாசிப்பு பிரிவின் பழுதுபார்த்தல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மீண்டும் கணனி பிரிவிற்காக புதிதாக தள ஒடுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் பதவியணிக்கு இலவசமாக பால் வழங்குவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 18,445,912 தொகை செலவிடப்பட்டிருந்தது. திணைக்களத்தின் வளாகத்தில் காற்றில் காணப்பட்ட பல்வேறு விஷ பாதார்த்தங்கள் உடலுக்குள் உட்புகுவதால் | திணைக்களத்தின் வளாகத்தில் உள்ள காற்றில் பல்வேறு விஷ பொருட்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான பரிசோதனைகள் முதலில் | அரச அச்சக திணைக்களத்தின் பதவியணிக்கு நீண்டகாலமாக வழங்கிய நலன்புரி நடவடிக்கையொன்றை உடனடியாக நிறுத்துவதற்கான இயலுமை இல்லை என்பதுடன் இதன்போது கருத்தில் கொள்ள வேண்டிய பிரதானமாக விடயமாகும். |

| | | |
|---|---|---|
| ஏற்படும் நோய் நிலைமைகளை தடுப்பதற்காக அனைத்து பதவியணியினருக்கும் பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அரச அச்சக அதிபரினால் கையொப்பமிடப்பட்ட 1986 பெப்ரவரி 07 ஆந் திகதிய O/H/M/33 ஆம் இலக்க பிரதி தொழில் ஆணையார் (தொழில்சார் சுகாதார) இன் கடிதத்தின் பிரகாரம் அவ்வாறு பால் வழங்குவதன் மூலம் உடலிலுள்ள விசப்பொருட்கள் அகற்றப்படுதல் இடம்பெறுவது இல்லை என்பதனால் அவ்வாறு பால் வழங்குவதினை நிறுத்துமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. | மேற்கொள்வதற்கும் அவ்வாறு பாதகமான நிலைமைகள் காணப்படுமாயின் அந்த நிலைமையினை கட்டுப்படுத்துவதற்கு நிபுணர்களின் அறிவுரையின் அடிப்படையில் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அவ்வாறே அரச அச்சக திணைக்களத்தின் வளாகத்தில் தூசு மற்றும் பல்வேறு விஷ தன்மையுடைய இராசயன துணிக்கைகள் காற்றில் பரவிக் காணப்படுகின்றமையால் இவ்வாறான பால் பக்கற்றுக்களை வழங்குதல் தொடர்பில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட மற்றுமொரு விடயமாகும். |

## 4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2001 மே 29 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 11/2001 இன் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் திணைக்களத்தினுள் முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தினுள் முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டியமை. | 11/2001 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முகாமைத்துவ அபிவிருத்த மற்றும் பயிற்சி அலகொன்றினை தாபிக்க வேண்டுமென்பதனை ஏற்றுக் கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 30 பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட பயிற்சி பாடநெறிகளின் எண்ணிக்கை 11 வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறே அந்த 11 பயிற்சி பாடநெறிகளில் 02 மாத்திரம் அச்சீட்டு பணிகளுடன் தொடர்புடைய பாடநெறிகளாகும். | அச்சீட்டு பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டினை கருத்திற் கொண்டு உச்ச செயற்திறனுடன் பயன்படுத்துவதற்காக இவ்வாறு பயிற்சி பாடநெறிகளில் எண்ணிக்கை ரீதியிலான குறைவொன்று இடம்பெற்றிருக்கின்றமையை தாழ்மையுடன் ஏற்றுக் கொள்கின்றேன். |